


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024ஆம் ஆண்டிற்கான "United Nation Interagency Task Force Award விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் சார்பில் உணவு பாதுகாப்பு துறையில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, பொது சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், உணவு பாதுகாப்புத் துறை கூடுதல் ஆணையர் மரு. டி.எ. தேவபார்த்தசாரதி, கடலூர் மற்றும் வேலூர் மாவட்ட நியமன அலுவலர்கள் உடனிருந்தனர்.

### உணவுப் பாதுகாப்புக் குறியீட்டிற்கான செயல்பாட்டில் - தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாம் இடம்!

# "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து - அமைச்சர் மா. சுப்பிரமணியன் வாழ்த்துப் பெற்றார் !

சென்னை, நவ.9 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024ஆம் ஆண்டிற்கான "United Nation Interagency Task Force Award" விருது மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் சார்பில் உணவு பாதுகாப்பு துறையில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட விருது, ஆகிய இரண்டு விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

"மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் விருது பெருகி வரும் தொற்றா நோய்களின் பாதிப்புகளை எதிர்கொள்ளும் விதமாக "மக்களைத் தேடி மருத்துவம்" எனும் உன்னதமான திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 5.8.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் பயனாளிகளின் இல்லங்களுக்கே சென்று 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, 45 வயதிற்கு மேற்பட்ட மற்றும் இயலாமையில் உள்ள நபர்களுக்கு தொற்றா நோய்க்கான மருந்து பெட்டகம் வழங்குதல், இயன்முறை சிகிச்சை சேவை, நோய் ஆதரவு சிகிச்சை, CAPD டயாலிஸிஸ் பேக் வழங்குதல் ஆகிய சேவைகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து 7.11.2024 வரை மாநில அளவில் 1,98,25,487 பயனாளிகள் முதன் முறை சேவைகளையும் 4,22,79,337 பயனாளிகள் தொடர்சேவைகளையும் பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் தொடர்ச்சியாக இதயம் பாதுகாப்போம் திட்டம், சிறுநீரகம் காக்கும் சீர்மிகு திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம், சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்டம், நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், பாதம் பாதுகாக்கும் திட்டம், சிறுநீரகம் - விழித்திரை பாதிப்புகளை சீர் செய்யும் மருத்துவம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 25 செப்டம்பர் 2024 அன்று நியூயார்க்கில் நடந்த 79வது ஐ.நா.பொது சபையின் லெவன்த் பிரண்ட்ஸ் ஆப் தி டாஸ்க் போர்ஸ் கூட்டத்தில் 2024க்கான டாஸ்க் போர்ஸ் விருதுகள் (Task Force Awards 2024) அறிவிக்கப்பட்டது. புதுமை மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் உட்பட தொற்றாநோய்கள் மற்றும் மனநலம் தொடர்பான சிறந்த பணிகளை அங்கீகரிக்கின்றன. உலக சுகாதார அமைப்பின் கொள்கை மற்றும் தர நிலையுடன் இணைந்து திறனுதவித் தொழில் நுட்பவியல் (assistive technology) பணியின் முக்கியத்துவத் தினை அங்கீகரிக்க இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதில் சுகாதார அமைச்சகங்கள் அல்லது சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள அரசு நிறுவனம் என்ற பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதன்மை திட்டமான மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு விருது அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது,

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தொற்றாநோய் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்தி "மக்களைத் தேடி மருத்துவம்" தமிழ்நாட்டை உலகத்திற்கே முன்மாதிரியான மாநிலமாக விளங்கச் செய்கிறது.

பொதுமக்களுக்கு தரமான, பாதுகாப்பான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 20.09.2024 அன்று "Global Food Regulators Summit2024", பாரத் மண்டபம், புதுடில்லியில் நடைபெற்ற விழாவில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் உணவு பாதுகாப்பு துறையில் மனித வளம் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவு பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்து, 2023-24ஆம் ஆண்டிற்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் இரண்டாவது மாநிலமாக, தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

இந்திய அளவில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் கடந்த மூன்று வருடங்களாக தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையானது, தொடர்ந்து முதல் மூன்று இடங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், உணவு பாதுகாப்புத் துறை கூடுதல் ஆணையர் மரு. டி.எ. தேவபார்த்தசாரதி, கடலூர் மற்றும் வேலூர் மாவட்ட நியமன அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### பயிர்க்கடன் - உரங்கள் தங்கு தடையின்றி விநியோகிக்கப்படுகிறது!

# அரசியல் ஆதாயம் தேட அவதூறுச் செய்திகளை வெளியிடுவதா?

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கண்டனம்!



**சென்னை, நவ.9 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான விவசாயிகளின் நலன்காக்கும் சீர்மிகு நல்லாட்சியில், ஒரு சில அரசியல் தலைவர்கள் ஆதாயம் தேடுகின்ற வகையில் உண்மைக்கு புறம்பாக, அர்த்தமற்ற, அவதூறு செய்திகளை பரப்புகின்றனர். அவற்றை எல்லாம் பொதுமக்கள் புறம் தள்ள வேண்டும் - என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் பருவ காலங்களில் பயிர்சாகுபடி செய்து பயன் பெறுவதற்கு ஏதுவாக பயிர்க்கடன் மற்றும் உரங்கள் தங்குதடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த சூழ்நிலையில் ஒரு சில அரசியல் தலைவர்கள் ஆதாயம் தேடும் வகையில் வெளியிட்டுள்ள அர்த்தமற்ற அவதூறு செய்திகளில் எள்ளளவும் உண்மை இல்லை.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீர்மிகு நல்லாட்சியில், விவசாயிகள் அந்தந்த பருவ காலங்களில் பயிர்சாகுபடி செய்ய ஏதுவாக மாநில தொழில்நுட்ப குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கடனளவிற்கு (Scale of Finance) உட்பட்டு விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்பவும் மற்றும் NABARD, RBI வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டும் பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2021-2022ஆம் ஆண்டில் 14,84,052 விவசாயிகளுக்கு ரூ.10,292 கோடி பயிர்க் கடனும், 2022-2023-ஆம் ஆண்டில் 17,43,817 விவசாயிகளுக்கு ரூ.13,442 கோடி பயிர்க் கடனும், 2023-2024ஆம் ஆண்டில் 18,36,345 விவசாயிகளுக்கு ரூ.15,542 கோடி பயிர்க்கடனும் வழங்கப்பட்டுள்ளது.

**ரூ.7,666 கோடி பயிர்க்கடன்!**

நடப்பாண்டில் 1.4.2024 முதல் 06.11.2024 வரை 8,62,544 விவசாயிகளுக்கு ரூ.7,666 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட ரூ.450 கோடி கூடுதலாகும். சென்ற ஆண்டு இதே நாள் வரை ரூ.7216 கோடி கடன் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பயிர்க்கடன்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளில் உள்ள விவசாயிகளின் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும், விவசாயிகள் தங்கள் வீட்டிலிருந்தே பயிர் கடன் பெற ஏதுவாக மொபைல் செயலி (Online Mobile App) மூலம் பயிர்க்கடன் பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல, பயிர்க்கடன்களை குறித்த காலத்தில் திருப்பி செலுத்திடும் விவசாயிகளிடம் வட்டி வசூலிக்கப்படுவதில்லை. அரசே அவ்வட்டி தொகையை ஏற்றுக்கொள்கிறது.

அதேபோன்று, விவசாயிகளுக்கு தங்குதடையின்றி உரம் அவர்களின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகின்றன. உரங்கள் வேளாண்மை துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் நகர்வு செய்யப்பட்டு, அந்தந்த சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் சங்கங்களில் இருப் பின்மை ஏற்பட்டால் Buffer Stockஇல் இருந்து உரங்கள் நகர்வு செய்யப்படும்.

1.4.2024 முதல் 6.11.2024 வரை 77,797 மெட்ரிக் டன் யூரியா, 41,119 மெட்ரிக் டன் DAP, 18,490 மெட்ரிக் டன் MOP, 70,116 மெட்ரிக் டன் காம்ப்ளெக்ஸ் உரங்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தற்போது வரை 32,755 மெட்ரிக் டன் யூரியா, 16,792 மெட்ரிக் டன் DAP, 13,373 மெட்ரிக் டன் MOP, 22,866 மெட்ரிக் டன் காம்ப்ளெக்ஸ் உரங்கள் கூட்டுறவு சங்கங்களில் இருப்பில் வைக்கப்பட்டு, உரங்கள் விவசாயிகளின் தேவைக்கேற்ப சிரமமின்றி பெற்றிட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**குறைந்த வட்டியில் கடன்கள்!**

மேலும், தமிழ்நாட்டில் 4456 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் அந்தந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், குறு, சிறு வியாபாரி கள் மற்றும் பொதுமக்களுக் குத் தேவையான பயிர்க்கடன், நகைக்கடன், சுய உதவிக்குழு கடன், தாட்கோ, டாம்கோ, டாப்செட்கோ என 26 வகையான கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இச்சூழ்நிலையில், ஒரு சில அரசியல் தலைவர்கள் ஆதாயம் தேடுகின்ற வகையில் உண்மைக்கு புறம்பாக, அர்த்தமற்ற, அவதூறு செய்திகளை பரப்புவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அவற்றை எல்லாம் பொதுமக்கள் புறம்தள்ள வேண்டும்.

**சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவுத்துறை!**

கூட்டுறவுத்துறையின் மூலம் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அவ்வப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும் சிறப்புத்திட்டங்கள் முதல் வெள்ள நிவாரணம் வரை அனைத்தும் பொது மக்களிடம் சென்றடையும் வகையில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள் அவதூறு செய்திகளை புறம் தள்ளி, கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தமது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; 'அ.தி.மு.க.வில் கள ஆய்வு' என்று எடப்பாடி அறிவித்திருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; கட்சியின் செயல்பாடுகளை நேரடியாக ஆய்வு செய்யப் போகிறாராம்; அதற்குத்தான் இந்தக் கள ஆய்வு என்று அறிவித்திருக்கிறார். இத்தனை ஆண்டுகளும் இதுவரை செய்யாத ஒன்றை இப்போது ஏன் அறிவித்திருக்கிறார்?**

**"கள ஆய்வில் முதல்வர்"என்று முதலமைச்சர் அறிவித்த திட்டத்திற்கு எதிர்வினை எடப்பாடியின் அறிவிப்பு.**

**"கள ஆய்வில் முதல்வர்" என்ற திட்டம், சென்ற மாதமே அறிவிக்கப்பட்டது. முதல் கட்டமாக, 5,6 தேதிகளில் கோவைக்கு வந்தார் முதல்வர். அவரது கள ஆய்வு, கோவையின் வளர்ச்சியில் புதிய திருப்பத்தை உண்டாக்கி உள்ளது. "கோவையில் ஸ்டாலின் சிக்ஸர் அடித்திருக்கிறார்" என்ற எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேட்டின் மனப் பூர்வமான வர்ணனை, கோவையில் எட்டுத்திக்கும் எதிரொலிக்கிறது !**

**கள ஆய்வின் ஒரு பகுதியாக, கழக உடன்பிறப்புகளையும் சந்தித்து, கட்சிப் பணி குறித்து ஆலோசனை நடத்தினார்.**

**அடுத்த கள ஆய்வு, விருதுநகரில் 9,10 தேதிகளில் நடைபெறும் என்றும் அறிவித்துவிட்டார் முதல்வர்.**

**இந்த நிலையில், 'புலியைப் பார்த்துச் சூடு போட்டுக் கொண்டதாம் பூனை' - என்ற கதையைப் போலல்லவா இருக்கிறது, எடப்பாடியின் அறிவிப்பு !**

### வேலூர் - அணைக்கட்டு தொகுதிகளில் வாக்காளர்களுக்கு

# டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ள D.M.கதிர்ஆனந்த் இன்று (09.11.2024 – சனிக்கிழமை) கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

**அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி**
**கணியம்பாடி தெற்கு ஒன்றியம்**

| நேரம் | இடங்கள் |
|---|---|
| காலை 9.30 மணி | பென்னாத்தூர் பேரூராட்சி |
| காலை 9.45 மணி | காட்டுப்புதூர் |
| காலை 10.00 மணி | சோழவரம் |
| காலை 10.15 மணி | துத்திக்காடு |
| காலை 10.30 மணி | பாலம்பாக்கம் |
| காலை 10.45 மணி | அரசம்பட்டு |
| காலை 11.00 மணி | சாத்துப்பாளையம் |
| | **வேலூர் சட்டமன்றத் தொகுதி** |
| மாலை 5.00 மணி | ஆஞ்சநேயர் கோயில் அருகில், கொணவட்டம் சேண்பாக்கம் பகுதி – 32வது வட்டம். |
| மாலை 5.30 மணி | அம்பேத்கர் சிலை அருகில், மக்கான் சேண்பாக்கம் பகுதி – 17வது வட்டம் |
| மாலை 6.00 மணி | வசந்தபுரம், கஸ்பா சேண்பாக்கம் பகுதி – 33வது வட்டம் |
| மாலை 6.30 மணி | பஜார் வீதி, ஆர்.என்.பாளையம் கஸ்பா பகுதி – 40,41,42,43வது வட்டம் |
| மாலை 7.00 மணி | முருகன் கோயில் அருகில், தொரப்பாடி தொரப்பாடி பகுதி – 49, 56வது வட்டம் |
| மாலை 7.30 மணி | திரௌபதியம்மன் கோயில் அருகில், ஆரணி ரோடு சங்கரன்பாளையம் பகுதி – 44, 48, 51,51, 52வது வட்டம் |